ஜெகத்குரு மகாமகரிஷி பரஞ்ஜோதியாரின்

அருள் அமுத மொழிகள்



சந்தோஷம்

உன்னை நம்பு

ஜெகத்குரு மகாமகரிஷி பரஞ்ஜோதியாரின்

அருள் அமுத மொழிகள்

வெளியீடு :
உலக சமாதான அறக்கட்டளை
ஸ்ரீ பரஞ்ஜோதி நகர், திருமூர்த்திமலை - 642 112
உடுமலை தாலுகா , கோவை மாவட்டம்.
தமிழ்நாடு, இந்தியா.

உன்னை நம்பு

நூல் தலைப்பு : அருள் அமுத மொழிகள்

பிரதிகளின் எண்ணிக்கை : 1000

முதல் பதிப்பு : மே-2007

வெளியீடு : உலக சமாதான அறக்கட்டளை,
திருமூர்த்திமலை

△

உன்னை நம்பு

△ தெளிவு குருவின் திருமேனி காணல்!

△ தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்!

△ தெளிவு குருவின் திருநாமம் செப்பல்!

△ தெளிவு குருவுரு சிந்தித்தல்!

என்ற நிலைகளில் குருவை உணர்ந்து, தெளிவு பெற்று என்றும் குருவின் எண்ணத்தில் நிலைக்க, நீடிக்க பரிபூரண நல்லாசிகள்!

சந்தோஷம்!

உன்னை நம்பு

என் இருதய அன்புச் செல்வங்களே!

- எடுக்க எடுக்க குறையாது வருமாம் அன்னம் அட்சயபாத்திரத்தில்.

- நீங்கள் ஒவ்வொருவரும் அன்பின் அட்சயபாத்திரம் தான்.

- அட்சய பாத்திரத்தில் இருந்து எடுக்க எடுக்க குறையாத அன்பை எடுத்து மற்றவர்களுக்கு வழங்குங்கள்.

இப்பூவுலகை அன்பின், ஆனந்தத்தின் உலகமாய் மாற்ற, என்றென்றும் நீங்கள் அன்பின் அட்சயபாத்திரமாக பரிணமிக்க பரிபூரண நல்லாசிகள்.

சந்தோஷம் !

உன்னை நம்பு

என் இருதய அன்புச் செல்வங்களே!

△ உங்களின் எண்ணமே இவ்வுலகின் எண்ணமாகும்.

△ உங்களின் சொல்லே இவ்வுலகின் சொல்லாகும்.

△ உங்களின் செயலே இவ்வுலகின் செயலாகும்.

△ உலகின் உயர்வும், தாழ்வும் உங்களிடமே.

உங்களின் நல்லெண்ணத்தால், எல்லோரும் எல்லாம் பெற்று இன்புற்று வாழ பரிபூரண நல்லாசிகள்.

சந்தோஷம்!

உன்னை நம்பு

என் இருதய அன்புச் செல்வங்களே!

நடந்தவைகள் அனைத்தையும் அனுபவமாக எடுத்துக் கொள்ளுங்கள்.

நடக்கப்போவதையும் அனுபவத்தைக் கொண்டு, நல்லனவாக மாற்றிக் கொள்ளுங்கள்.

உங்களை நீங்கள் உணர்வதற்காகத் தான் அனுபவங்கள் கொடுக்கப்படுகிறது.

அனுபவங்களை ஏற்றுக் கொண்டு, வாழ்வின் தடைகளை தகர்த்து, வெற்றி பெற பரிபூரண நல்லாசிகள்.

சந்தோஷம் !

△

உன்னை நம்பு

என் இருதய அன்புச் செல்வங்களே!

△ இயற்கையின் தன்மையை உணர்வோம்.

△ உலகிற்கு இயற்கை எவ்வளவு முக்கியம் என்பதைஉணர்வோம்.

△ இயற்கையை பாதுகாக்க தவறியதால் தான் இன்று உலகில் இவ்வளவு பாதிப்புகள்.

△ நமது வாழ்வோடு இணைந்தது இயற்கை என்பதை உணர்வோம்; உணர வைப்போம்.

இயற்கை வளமோடு இருந்தால் தான் உலக உயிர்கள் அனைத்தும் இன்புற்று வாழ முடியும் என்பதை உணர்ந்து செயல்பட பரிபூரண நல்லாசிகள்.

சந்தோஷம் !

உன்னை நம்பு

என் இருதய அன்புச் செல்வங்களே!

இவ்வுலகில் எங்கும் நீக்கமற நிறைந்திருப்பது அன்பு தான்.

அன்பு கத்தியைப் போன்றது.

இன்று உலகில் உயிர்கள் இன்பமாயிருப்பதற்கு காரணம் அன்பு தான்.

இன்று உலகில் உயிர்கள் துன்பப் படுவதற்கும் காரணம் அன்பு தான்.

அன்பு சரிவர அனைவருக்கும் பாகுபாடில்லாமல், பாரபட்சமில்லாமல் கிடைத்தால் இவ்வுலகம் உய்வு பெறும்.

அன்பில் அனைவரும் தெளிவு பெற்று, இவ்வுலக உயிர்கள் இன்புற பரிபூரண நல்லாசிகள்.

சந்தோஷம்!

△

உன்னை நம்பு

என் இருதய அன்புச் செல்வங்களே!

△ உங்களிடம் அன்பு இல்லையா? அறிவு இல்லையா? ஆற்றல் இல்லையா? பொறுமை தான் இல்லையா?

△ இவை அனைத்தும் உங்களுள் புதைந்து கிடக்கின்றது.

△ அதற்கு மேல் குருவருளும், இறையருளும் உங்களுள் புதைந்து கிடக்கின்றது.

△ உங்கள் எண்ணத்திலும், கண்களிலும் நான் இருக்கின்றேன்.

△ கடமையைச் செய்யுங்கள். செய்வது நீங்கள்; செய்ய வைப்பது நான்.

உண்மையை உணர்ந்து, உன்னதத்தை அடைய பரிபூரண நல்லாசிகள்.

சந்தோஷம்!

உன்னை நம்பு

என் இருதய அன்புச் செல்வங்களே!

△ தன்னலமற்ற இடத்தில் தான் தூய அன்பின் மனத்தை நுகர முடியும்.

△ அங்குதான் பிறருக்கு உதவும் குணமாகிய தூய உள்ளம் இருக்கும்.

△ பணிவு தூய அன்பு உள்ளத்தைத் தேடி தன்னாலே வந்து விடும்.

△ பணிவு என்பது தன்னம்பிக்கையும், அன்பும் கலந்த ஓர் உயர்ந்த தெய்வீகக் கலவையாகும்.

△ இதுவே உயர்ந்த ஞானத்தின் வெளிப்பாடுமாகும்.

உயர்ந்த ஞானத்தின் வெளிப்பாடாக நீங்கள் வெளிப்பட, பிரகாசிக்க பரிபூரண நல்லாசிகள்.

சந்தோஷம் !

△

உன்னை நம்பு

என் இருதய அன்புச்செல்வங்களே!

△ குருவை புறத்தில் பற்றாதீர்கள்.

△ குருவை இறையுணர்வில் பற்றுங்கள்.

△ குருவின் எல்லையில்லா அன்பின் நிலையான இறையுணர்விற்கு உங்களை அர்ப்பணியுங்கள்.

△ எல்லையில்லாத அன்பில் மூழ்கிய பின் எதற்காக கலக்கம்?

△ எல்லையில்லா அன்பில் மூழ்கிய உங்களை வெல்பவர் இவ்வுலகில் இல்லை.

எல்லையில்லா குரு அன்பில் என்றும் திளைக்க பரிபூரண நல்லாசிகள்!

சந்தோஷம்!

△

உன்னை நம்பு

என் இருதய அன்புச்செல்வங்களே!

△ அன்னைபத் தேடிய அறிவு, பேரன்போடு ஒன்றட்டும்.

△ அறிவைத் தேடிய அறிவு, பேரறிவோடு ஒன்றட்டும்.

△ ஆற்றலைத் தேடிய அறிவு, பேராற்றலோடு இணையட்டும்.

△ ஆனந்தத்தை தேடிய அறிவு, பேரானந்தத்தோடு ஒன்றட்டும்.

△ அமைதியைத் தேடிய அறிவு, பேரமைதியோடு இணையட்டும்.

இவற்றையெல்லாம் அடைய பேரருளைத் தேடிய நீங்கள், கடந்து உள் இருக்கின்ற குருவருளில் இரண்டறக் கலக்க பரிபூரண நல்லாசிகள்.

சந்தோஷம்!

உன்னை நம்பு

என் இருதய அன்புச்செல்வங்களே!

△ தேவையில்லாதவைகள் நீங்கி நன்மைகள் மலரட்டும்.

△ தேவையில்லாதவைகளை நீக்கிக் கொள்ள துணிவு கொள்ளுங்கள்.

△ தேவையில்லாதவற்றிலிருந்து விடுபட எழுச்சி கொள்ளுங்கள்.

△ உடலாக, மனமாக, அறிவாக இருந்தது போதும்.

△ ஆத்மனாக மாறுங்கள்.

தேவையில்லாதவைகளிலிருந்து விடுபட்டு, ஆத்மனாகப் பிரகாசிக்க பரிபூரண நல்லாசிகள்.

சந்தோஷம்!

△

உன்னை நம்பு

என் இருதய அன்புச் செல்வங்களே!

△ நீங்கள் தான் உண்மை!

△ நீங்கள் தான் சத்தியம்!

△ நீங்கள் தான் நித்தியம்!

△ நீங்கள் தான் பரம்பொருளின் சொரூபம்!

△ நீங்கள் தான் பரமாத்மாவின் அம்சம்!

△ நீங்கள் தான் ஆன்மா!

எல்லாமாக நீங்கள் மலர்ந்து, மணம் வீச பரிபூரண நல்லாசிகள்.

சந்தோஷம்!

உன்னை நம்பு

என் இருதய அன்புச் செல்வங்களே!

- உங்கள் உடலுக்கு நீங்கள் தான் பொறுப்பு!
- உங்கள் சுவாசத்திற்கு நீங்கள் தான் பொறுப்பு!
- உங்கள் மனதிற்கு நீங்கள் தான் பொறுப்பு!
- உங்கள் அறிவிற்கு நீங்கள் தான் பொறுப்பு!
- உங்கள் உயிருக்கு நீங்கள் தான் பொறுப்பு!
- உங்களுக்கு அனைத்தும் நீங்கள் தான்!

உங்களுக்கு அனைத்துமாக இருக்கின்ற நீங்கள், எல்லா உயிர்களுக்கும் அனைத்துமாக இருக்க பரிபூரண நல்லாசிகள்.

சந்தோஷம் !

உன்னை நம்பு

என் இருதய அன்புச் செல்வங்களே!

- உங்களை நீங்களே தெளிவு படுத்திக் கொள்ளுங்கள்!
- உங்களை நீங்களே சமாதானப் படுத்திக் கொள்ளுங்கள்!
- உங்களை சமாதானப்படுத்துபவர்கள் வெளியில் இல்லை!
- உங்களுக்குத் துணிவைக் கொடுப்பவர்கள் வெளியில் இல்லை!
- உங்களுக்கு அன்பைக் கொடுப்பவர்கள் வெளியில் இல்லை!
- எல்லாம் உங்களுள் இருந்தே வெளிப்படுகிறது!

உங்களுள் இருக்கும் அனைத்தையும் உணர்ந்து, உய்வு பெற்று, இவ்வுலக உயிர்களும் உய்வு பெறச் செய்ய பரிபூரண நல்லாசிகள்.

சந்தோஷம் !

△

உன்னை நம்பு

என் இருதய அன்புச் செல்வங்களே!

△ என்னை வெளியில் தேடாதீர்கள்!

△ எங்கும், எப்போதும், எதிலும் நிறைந்துள்ளவன் **நான்!**

△ எங்கும் நிறைந்துள்ள **நான்** உங்கள் நலன் கருதி உங்கள் அகத்திலும் நிறைந்துள்ளேன்!

△ என்றும் உள்ளவனாகையால் **நான்** பிறப்பதுமில்லை; இறப்பதுமில்லை!

உங்களில் நிறைந்துள்ள எம்மை உணர்ந்து, பேரமைதி கொள்ள பரிபூரண நல்லாசிகள்!

சந்தோஷம்!

△

உன்னை நம்பு

என் இருதய அன்புச் செல்வங்களே!

△ எனக்கும் உங்களுக்கும் உள்ள பந்தம் இன்று - நேற்று தோன்றியதல்ல!

△ யுகம் யுகமாகத் தோன்றிய பந்தம்!

△ இந்த பந்தம் உடல் பந்தமல்ல; ரத்த பந்தமல்ல!

△ இந்த பந்தம் ஆன்ம பந்தம்!

இதை உணர்ந்து, பந்தமற்ற, பிரதிபலன் பாரா கடமைகளில் சிறக்க பரிபூரண நல்லாசிகள்!

சந்தோஷம் !

△

உன்னை நம்பு

என் இருதய அன்புச் செல்வங்களே!

△ உங்களின் இயல்பு புலன் இயல்பு அல்ல!

△ உங்களின் இயல்பு மன இயல்பு அல்ல!

△ உங்களின் இயல்பு தெய்வீக இயல்பு!

நீங்கள் உங்கள் தெய்வீக இயல்புகளை, தெய்வீகத் தன்மைகளை உணர்ந்து, தெய்வீகத்தோடு இரண்டற கலக்க பரிபூரண நல்லாசிகள்!

சந்தோஷம்!

உன்னை நம்பு

என் இருதய அன்புச் செல்வங்களே!

- நீங்கள் தேடிய அன்பு!
- நீங்கள் தேடிய அமைதி!
- நீங்கள் தேடிய ஆனந்தம்!
- நீங்கள் தேடிய கடவுள்!

என்று நீங்கள் தேடிய அனைத்தும் உங்களுள்ளேதான் இருக்கிறது.

உங்களுள் உள்ள நீங்கள் தேடிய அனைத்தையும் அறிந்து, உணர்ந்து உய்வு பெற பரிபூரண நல்லாசிகள்!

சந்தோஷம் !

◬

உன்னை நம்பு

என் இருதய அன்புச் செல்வங்களே!

◬ உங்களின் விசுவாசமும், உருக்கமும், நம்பிக்கையும்தான் உங்களுக்கு சகலத்தையும் அளிக்கிறது!

◬ இவை மூன்றும் உடையவர்கள் எண்ணிய நல்லெண்ணப்படி உயர்கிறார்கள்!

◬ இறையின் மீது விசுவாசமும், உருக்கமும், நம்பிக்கையும் கொள்ளுங்கள்!

உங்களின் நல்லெண்ணத்தால் நீங்கள் உய்வு பெற்று, இவ்வுலகையும் உய்வுபெறச் செய்ய பரிபூரண நல்லாசிகள்!

சந்தோஷம்!

உன்னை நம்பு

என் இருதய அன்புச் செல்வங்களே!

மண்ணுலகிலே நீங்கள் ஆற்ற வேண்டிய கடமைகளைச் செய்ய உங்களை நீங்கள் உணர வேண்டும்!

நீங்கள் எதை உங்களில் உணர்கிறீர்களோ அதுவே உங்களிடமிருந்து வெளிப்படும்!

உங்களிலே உங்களை உணர்ந்தால் பிரபஞ்சம் யாவும் நீங்களாகவே இருப்பதை உணர்வீர்கள்!

எதற்காக இவ்வளவு பிறவிகள் காத்திருந்தீர்களோ அது உங்களுள் இருந்து வெளிப்படட்டும்.

உங்களிலிருந்து வெளிப்பட்ட உண்மை பிரபஞ்சம் எங்கும் நீக்கமற நிறைய பரிபூரண நல்லாசிகள்!

சந்தோஷம் !

△

உன்னை நம்பு

என் இருதய அன்புச் செல்வங்களே!

△ நன்மை செய்தவர்களை வாழ்த்துவது ஒரு நிலை!

△ நன்மை செய்தவர்கள், செய்யாதவர்கள் என்ற பாரபட்சம் பார்க்காமல் எல்லோரையும் வாழ்த்துவது ஒரு நிலை!

△ தனக்கு துன்பம் கொடுத்தவர்களையும் மன்னித்து வாழ்த்துவது அதனினும் மேல்நிலை!

△ யோகியர்களாகிய நீங்கள் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு இடம் கொடுக்காமல் அனைவரையும் வாழ்த்துங்கள்.

விருப்பு வெறுப்பற்ற நிலையில் நீங்கள் செயல்பட பரிபூரண நல்லாசிகள்!

சந்தோஷம்!

உன்னை நம்பு

என் இருதய அன்புச் செல்வங்களே!

△ இந்த உலகை கருணையோடுப் பாருங்கள்!

△ ஒவ்வொரு மனிதனையும், ஒவ்வொரு ஜீவராசியையும் கருணையோடுப் பாருங்கள்!

△ அன்பு கூர்ந்த பார்வையால் தன்னையும் வெல்லலாம்; அகிலத்தையும் வெல்லலாம்!

கருணையோடு, அன்பு கூர்ந்த பார்வையால் அகிலத்தையே நீங்கள் வெல்ல பரிபூரண நல்லாசிகள்!

சந்தோஷம்!

உன்னை நம்பு

என் இருதய அன்புச் செல்வங்களே!

△ நல்லவர்களே! வல்லவர்கள் ஆகுங்கள்.

△ வல்லவர்களே! நல்லவர்கள் ஆகுங்கள்.

△ இந்த உலகத்தின் மாற்றத்திற்காகவே நீங்கள் இந்த மண்ணிலே அவதாரம் எடுத்திருக்கிறீர்கள்.

△ உங்களுடைய பாதை யாருக்கும் வழிகாட்டுகின்ற பாதை.

உங்களது நன்மையாலும், வன்மையாலும் நீங்கள் உங்களுடைய பாதையை உணர்ந்து உன்னதத்தை அடைந்து, பிற மக்களுக்கு வழிகாட்ட பரிபூரண நல்லாசிகள்.

சந்தோஷம்!

△

உன்னை நம்பு

என் இருதய அன்புச் செல்வங்களே!

△ வாழ்க்கை அர்த்தமுள்ள வாழ்க்கை.

△ எனவே, உங்களுடைய கடமைகளைப் புரிந்து கொண்டு சுகமானதை விடுத்து, சரியானதை தேர்ந்தெடுங்கள்.

△ சரியான பாதையில் சென்று, சுகமானதையும் அடைவீர்களாக!

உங்களது சரியான பாதையால் நீங்கள் உங்களுடைய கடமையை உணர்ந்து, உன்னதத்தை அடைந்து, பிற மக்களுக்கும் வழிகாட்ட பரிபூரண நல்லாசிகள்.

சந்தோஷம் !

△

உன்னை நம்பு

என் இருதய அன்புச் செல்வங்களே!

△ குரு-சீடர் உறவு இன்று நேற்று தோன்றியதல்ல.

△ காலம் காலமாக தொடர்ந்து வரும் நித்திய உறவு.

△ கால, தேசவர்த்தமானங்களை எல்லாம் கடந்தது இந்த உறவு.

△ இது சாஸ்வதமானது; என்றும் அழியாதது.

உருக்கத்தோடு கடந்து உள்நோக்கிச் சென்று உங்களுக்கும் குருவிற்கும் உள்ள உறவை உணர்ந்து, உங்களில் நீங்கள் உய்வு கொள்ள பரிபூரண நல்லாசிகள்.

சந்தோஷம்!

△

உன்னை நம்பு

என் இருதய அன்புச் செல்வங்களே!

△ மற்றவர்களின் மனதைப் புண்படுத்தாத எண்ணமே எமது எண்ணம்!

△ மற்றவர்களின் மனதை புண்படுத்தாத சொல்லே எமது சொல்!

△ மற்றவர்களின் மனதை புண்படுத்தாத செயலே எமது செயல்!

என்றும் எமது எண்ணம், சொல், செயல், இம்மூன்றிலும் சீராயிருந்து, சிறப்பானதொரு நிலையை அடைய பரிபூரண நல்லாசிகள்!

சந்தோஷம்!

△

உன்னை நம்பு

என் இருதய அன்புச் செல்வங்களே!

△ அன்பும், பணிவும் உங்களது எண்ணங்களில், சொற்களில், செயல்களில் என்றும் பரிணமிக்கட்டும்!

△ எவ்வளவுதான் உயர்ந்த நிலைகளில் இருந்த போதிலும் மக்களுக்கு அன்பு, பணிவின் மூலமாக சேவை செய்ய முற்படுங்கள்!

△ அன்பினால் அனைவரையும் ஒன்றுபடுத்துங்கள்!

△ எமது அன்பு என்றும் உங்களை வழிநடத்திக் கொண்டும், பாதுகாத்துக் கொண்டும் வரும்!

அன்பு வழியில் நின்று அறக்கடமைகளில் சிறக்க பரிபூரண நல்லாசிகள்!

சந்தோஷம் !

△

உன்னை நம்பு

என் இருதய அன்புச் செல்வங்களே!

△ உங்களை உயர்த்துவதும், உங்களை வீழ்த்துவதும், உங்களிடமிருந்து வெளிப்படும் சொற்கள் தான்!

△ அன்பான, ஆதரவான, பண்பான, மற்றவர்களை துன்புறுத்தாத, புண்படுத்தாத சொற்களே உங்களிடமிருந்து வெளி வரட்டும்!

△ நீங்கள், உங்களுக்கு முன் உங்களது இனிய சொற்களை முன் நிறுத்துங்கள்!

உங்களது அன்பான, பண்பான, ஆதரவான மற்றவர்களை துன்புறுத்தாத, புண்படுத்தாத சொற்களால் உலக உயிர்களை அரவணைக்க பரிபூரண நல்லாசிகள்!

சந்தோஷம் !

உன்னை நம்பு

என் இருதய அன்புச் செல்வங்களே!

△ எது நடப்பினும் அதை ஏற்றுக் கொள்ளக்கூடிய மனப்பக்குவத்தைப் பெற்று வாழுங்கள்!

△ சந்தர்ப்பத்தையும், சூழ்நிலைகளையும் புரிந்து கொண்டு வாழ முற்படுங்கள்!

△ உங்களை நீங்கள் புரிந்து கொண்டு, பிறகு மற்றவர்களையும் புரிந்து, உணர்ந்து வாழ முற்படுங்கள்!

மேற்கண்ட உயர்பண்புகளை நீங்கள் பெற்று, உங்கள் பெற்றோர்களுக்கும், ஆலயத்திற்கும், சமுதாயத்திற்கும் சிறப்பு சேர்க்க பரிபூரண நல்லாசிகள்!

சந்தோஷம்!

◬

உன்னை நம்பு

என் இருதய அன்புச் செல்வங்களே!

◬ குருமகான் உங்களோடு என்றும், எப்பொழுதும் துணையாய் இருப்பார்!

◬ குருமகானின் பரிபூரண கடாட்ஷம் எப்பொழுதும் உங்களுக்கு உண்டு!

◬ குருமகானின் உணர்வு நிலைகளில் நீங்கள் எல்லோரும் நீக்கமற நிறைந்திருக்கின்றீர்கள்.

குருமகானை, உங்களை, உண்மையை உணர்ந்து, குருமகானின் தன்மைகளில் நீங்கள் பிரகாசிக்க பரிபூரண நல்லாசிகள்.

சந்தோஷம்!

உன்னை நம்பு

என் இருதய அன்புச் செல்வங்களே!

△ உலக உயிர்கள் அனைத்தும் ஒன்றிற்காகத்தான் இயங்குகிறது.

△ அந்த ஒன்று தான் பிரம்மம்.

△ அந்த ஒன்று தான் ஆன்மா.

△ அந்த ஒன்று தான் குரு.

△ இவையனைத்துமாக இருப்பது நீங்கள்.

அனைத்துமாக நீங்கள் இருப்பதை உணர்ந்து, அனைத்துமாக நீங்கள் பரிணமிக்க பரிபூரண நல்லாசிகள்.

சந்தோஷம் !

△

உன்னை நம்பு

என் இருதய அன்புச் செல்வங்களே!

△ உங்களது எண்ணம் அன்பானதாக, தூய்மையானதாக, உண்மையானதாக இருக்கட்டும்.

△ உங்களது சொல் அன்பானதாக, தூய்மையானதாக, உண்மையானதாக இருக்கட்டும்.

△ உங்களது செயல் அன்பானதாக, தூய்மையானதாக, உண்மையானதாக இருக்கட்டும்.

△ எங்கு அன்பும், தூய்மையும், உண்மையும் இருக்கிறதோ, அங்கே நான் நிறைந்திருக்கின்றேன்.

எண்ணம், சொல், செயல்களில், அன்பாய், தூய்மையாய், உண்மையாய் இருந்து, உங்களுள் எம்மை உணர பரிபூரண நல்லாசிகள்.

சந்தோஷம் !

உன்னை நம்பு

என் இருதய அன்புச் செல்வங்களே!

△ இறைவனுக்குப் படைக்கப்பட்டது பிரசாதம்.

△ இறைவனுக்குப் படைக்கப்படாதது சாதம்.

△ உண்மையை உணர்ந்தவர்கள் பிரசாதம் ஆவார்கள்.

சர்வ வல்லமை பெற்ற, உண்மையை உணர்ந்த, இறைவனுக்குப் படைக்கப்பட்ட, அர்ப்பணிக்கப்பட்ட பிரசாதமாக நீங்கள் மலர எமது பரிபூரண நல்லாசிகள்!

சந்தோஷம்!

△

உன்னை நம்பு

என் இருதய அன்புச் செல்வங்களே!

△ எண்ணமே கடவுள்.

△ எண்ணமே உயிர்.

△ எண்ணமே உலகம்.

△ ஞானியர்களின் நல் எண்ணத்தின் விளைவே இவ்வுலகம்.

△ உங்களின் நல் எண்ணத்தின் விளைவை நீங்கள் தான் தீர்மானிக்க வேண்டும்.

உங்களின் நல் எண்ணத்தால் இவ்வுலகம் உய்வு பெற பரிபூரண நல்லாசிகள்.

சந்தோஷம்!

△

உன்னை நம்பு

△ உலகத்தில் எது நடக்க இருக்கின்றதோ, அது பாரதத்தில் நடக்கும்.

△ பாரதத்தில் என்ன நடக்க இருக்கின்றதோ, அது தமிழகத்தில் நடக்கும்.

△ தமிழகத்தில் என்ன நடக்க இருக்கின்றதோ, அது திருமூர்த்திமலை என்ற இந்த தென் கைலாயத்தில்நடக்கும்.

△ மீண்டும் இந்த தென் கைலாயத்தில் இருந்து தான் அற்புதமான ஒரு யுகமாற்றம் ஏற்படவேண்டும் என்பது நியதி.

உடல், உள்ளம், உயிர் இம்மூன்றிலும் சிறந்து, ஏற்பட இருக்கும் யுகமாற்றத்தில் நீங்கள் கடமையாற்ற பரிபூரண நல்லாசிகள்!

சந்தோஷம்!

உலக உயிர்கள் யாவும்

இன்புற்று வாழட்டும்!

வையகம் சாந்தியும்,

சமாதானமும்,

சந்தோஷமும்

அடையட்டும்!!

உன்னை நம்பு

வளர்க மெய்ஞானம்!

வாழ்க சமாதானம்!

உலக நலம் காப்போம்!

உலக அமைதி காப்போம்!

சத்குருவின் அருளால்

சத்திய யுகம் காப்போம்!

சந்தோஷம்!

சந்தோஷம்!!

சந்தோஷம்!!!

உன்னை நம்பு

புதியதோர் உலகம் செய்வோம்

வாரீர்! வாரீர்!! வாரீர்!!!





வெளியீடு :
உலக சமாதான அறக்கட்டளை
ஸ்ரீ பரஞ்ஜோதி நகர், திருமூர்த்திமலை - 642 112
உடுமலை தாலுகா , கோவை மாவட்டம்.
போன் : 04252 - 265101, 265676
E-mail : santosam@sancharnet.in,
upf@universalpeacefoundation.org
Website : www.universalpeacefoundation.org